மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.**T.கோகுலகிருஷ்ணன்** **B.A., B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

**2022**ம் வருடம் மாதம் **அக்டோபர்** மாதம் **13**ம் நாள்

**சுபகிருது** ஆண்டு **புரட்டாசி** மாதம் 26 ம் நாள் வியாழக்கிழமை

CNR.No. TNMD-19-000087-2017

**IA.No.57/2021**

**in**

**O.S. No.97/2017**

1. பிரேம்குமார்
2. ராணி
3. செல்வராஜ்
4. ஜெயக்குமார் ..... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

//எதிர்//

விஜயன்

.... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு **11.01.2021**ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் **திரு.M.தியாகராஜன் மற்றும் திரு.M.சுரேஷ்** அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.G.M.ரமணி** அவர்கள் ஆஜராகியும், கடந்த **19.09.2022**ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான....

**உத்தரவு**

இந்த மனு, பிராதில் சொல்லப்பட்டுள்ள A,B,C,D செடியூல் சொத்துக்களை நீதிமன்ற ஆணையாளர் நேரிடையாக பார்வையிட்டு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்து நீதிமன்ற ஆணையாளர் அறிக்கையினை தாக்கல் செய்வதற்கு நீதிமன்ற ஆணையாளர் நியமனம் கோரி கட்டளை 26 விதி 9 மற்றும் பிரிவு 151ன் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டத்தின் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம்:**

மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி ஆவார் என்றும் 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கும்

சேர்த்து இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், அசல் வழக்கானது மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக பிராதில் சொல்லப்பட்டுள்ள 'C' செடியூல் சொத்தான தென்வடல் 8 அடி அகலம் 73 அடி நீளம் உள்ள சந்தானது வாதிக்கு மட்டும் பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோரியும், A மற்றும் B செடியூல் சொத்துக்களை மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 8வது ஆவணமாகிய வரைபடத்தில் எதிர்மனுதாரர்/வாதியால் காட்டப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற செயல் உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்உரை மற்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால், கடந்த 10.03.2020ம் தேதியில் தாவா சொத்தினை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண். 92/2020 மனுவானது கடந்த 10.03.2020 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், ஆனால் எதிர்மனுதாரர்/வாதியால் பிராதில் சொல்லியுள்ள சொத்துக்களும் சந்தாகவும் மற்றும் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளதால் பிராதில் சொல்லப்பட்டுள்ள A,B,C,D செடியூல் சொத்துக்களை நீதிமன்ற ஆணையாளர் நேரிடையாக பார்வையிட்டு கிராம நிர்வாக அலுவலர் மற்றும் சர்வேயர் உதவியுடன் அளவீடு செய்வதற்கு நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்யப்பட வேண்டியது அவசியமானது என்றும், இம்மனு அனுமதிக்காவிடில் மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு பெருத்த இழப்பு ஏற்படும், இம்மனுவினை அனுமதிப்பதில் எதிர்மனுதாரர்/வாதிக்கு போதிய ஆட்சேபணை இருக்க வாய்ப்பில்லை என்றும், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) எதிர்மனுதாரர்/வாதி தரப்பு எதிர்உரையின் சுருக்கம்:**

எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அசல் வழக்கு பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி கடந்த 28.08.2017 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வரப்படுகிறது என்றும், பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இம்மனுவில் 1 முதல் 5 பிரதிவாதிகளின் பெயர்கள் முறையாக இடம் பெறவில்லை என்றும், ஆனால், மற்ற பிரதிவாதிகளுக்கும் சேர்த்து இம்மனுவினை தாக்கல் செய்வதாக கூறப்பட்டுள்ளது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும், 2ம் பிரதிவாதி கடந்த 01.07.2019 தேதியில் நீதிமன்றத்தில் ஆஜராவதற்கு அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ள நிலையில், அவருக்காகவும் சேர்த்து இம்மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண். 308/2017 மனுவிற்கு பிரதிவாதிகள் தரப்பில் நாளது தேதி வரை கவுண்டர் தாக்கல் செய்யப்படவில்லை என்றும், ஏற்கனவே நீதிமன்ற ஆணையாளர் நியமனம் கோரி தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண். 92/2020 மனுவும் பிரதிவாதிகளுக்கு எதிராக கடந்த 10.03.2020 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும். மேற்படி இடைநிலை மனுவில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில்

கவுண்டர் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில், நீதிமன்றத்தை ஏமாற்றும் எண்ணத்துடன் மீண்டும் நீதிமன்ற ஆணையாளர் நியமன மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனுவானது முன்தீர்ப்பு தடை(Re judicata) தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் இம்மனு எடுத்த எடுப்பிலே தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றும்,

மேலும், தாவா சொத்தில் பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது என்பதை நிரூபணம் செய்ய வருவாய் ஆவணங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்படவில்லை என்றும், எனவே பிரதிவாதிகள் தரப்பில் சர்வே எண்களை தெளிவாக குறிப்பிடாமல் புதிததாக ஆவணங்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று எதிர்மனு உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4)** இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை என்னவென்றால்,
இறுதியாக,
இந்த மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு:-</u>**

5) மனு அபிடவிட் மற்றும் எதிர்மனு உரை மற்றும் இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதுரைகளும், வழக்கு கோப்புகளும் சமூக நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கட்டளை 26 விதி 9 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்/1ம் பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுவின் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், தாவா சொத்துக்களை பொறுத்து விளம்புகை பரிகாரம் மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) இம்மனுவின் அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ள வேண்டி நிலுவையில் உள்ளது.

8) மனுதாரர்/1ம் பிரதிவாதியால் ஏற்கனவே ஆணையர் நியமன மனு தாக்கல் செய்யப்பட்டு சமூக நீதிமன்றத்தால் இ.ம.எண். 92/2020 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, முழு விசாரணைக்கு பின்னிட்டு கடந்த 10.03.2020 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பகரப்பட்டுள்ளது. மேற்படி இ.ம.எண். 92/2020 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு எ.ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளதை சமூக நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

9) எ.ம.சா.ஆ.2 முதல் 4 வரையுள்ள ஆவணங்கள் சமூக நீதிமன்றத்தால் கவனமாக

பார்வைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மேற்கண்ட ஆவணங்கள் அசல் வழக்கில் சாட்சிய விசாரணையின் பொழுது தெளிவுப்படுத்திக்கொள்ள வேண்டியது என சமூக நீதிமன்றத்தால் அறிந்து கொள்ள முடிகின்றது.

10) மனுதாரர்/1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு, இ.ம.எண். 92/2020-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி, முன்தீர்ப்பு தடை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக சமூக நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. மேற்படி இ.ம.எண். 92/2020-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக மனுதாரர்/1ம்பிரதிவாதியால் நாளது தேதி வரை எவ்வித மேல்முறையீடும் செய்யப்படவில்லை என வழக்கு ஆவணங்களை பார்வையிடப்பட்ட வகையில் இந்த நீதிமன்றத்தால் அறிய முடிகிறது.

11) ஆகவே, கட்டளை 26 விதி 9 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்/1ம் பிரதிவாதியால் ஏற்கனவே மனு தாக்கல் செய்யப்பட்டு, சமூக நீதிமன்றத்தால் இ.ம.எண் 92/2020 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, முழு விசாரணைக்கு பின்னிட்டு, தள்ளுபடி செய்யப்பட்டு உள்ளதால், மேற்படி தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவான எ.ம.சா.ஆ.1 நாளது தேதி வரை ரத்து செய்யப்படாத நிலையில், இந்த மனு முன்தீர்ப்பு தடை தோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

12) மனுதாரர்/1ம் பிரதிவாதியால், இம்மனுவில் சொல்லப்பட்டுள்ள காரணங்கள் இ.ம.எண். 92/2020-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்தரவுபடி ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லையென சமூக நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது. அதன் காரணமாக மனுதாரர்/1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு நிரூபணம் செய்யப்படவில்லை என தீர்வு காணப்படுகிறது.

இறுதியாக,

மனுதாரர்/1ம்பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அசல் வழக்கின் தன்மைக் கருதியும், நீதியின் நலன் கருதியும், எ.ம.சா.ஆ.1ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படியும், செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவு பகரப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரிடையாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

ஒம். T. கோகுலகிருஷ்ணன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

**<u>1) மனுதாரர்கள் தரப்பு சாட்சி சான்றாவணங்கள் இல்லை</u> :** இல்லை

**<u>2) எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி இல்லை</u>**

**<u>3) எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:</u>**

எ.ம.சா.ஆ.1- இ.ம.எண். 92/2020ன் உத்தரவு நகல்

எ.ம.சா.ஆ.2- 1512.1898ம் தேதியிட்ட கிரைய பத்திரம் சான்று நகல்

எ.ம.சா.ஆ.3- 30.05.1908ம் தேதியிட்டகிரைய பத்திரம் சான்று நகல் ·

எ.ம.சா.ஆ.4 - பட்டா எண் .532க்கான மனைவாரி தோராய பட்டா அசல்

ஓம். T. கோகுலகிருஷ்ணன்
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.

//உண்மை நகல்//